பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 08 2026 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா - இஸ்ரேல் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- இந்தியா - சிங்கப்பூர் இடையே பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- அமெரிக்காவில் இருந்து எத்தனால் இறக்குமதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது.
- ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் அந்நாட்டைச் சேர்ந்த 30 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.
- தேசிய ஜூனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியில், ஒடிசா, மத்தியப்பிரதேசம் அணிகள் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - இஸ்ரேல் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு தொலைபேசி மூலம் தம்மை தொடர்புகொண்டு பேசியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்பேது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதித்ததாக கூறியுள்ளார்.

மேலும் மேற்காசியாவில் நிலவி வரும் தற்போதைய சூழல் குறித்து இரு தலைவர்களும் பரஸ்பரம் தங்களது கருத்துகளை பரிமாறிக் கொண்டதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஒடிசா மாநிலம் Chandipur-ல் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் இருந்து வானில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் அக்னி-4 ஏவுகணை வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.

இந்த ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆயுதங்களை வடிவமைப்பதில் அரசு உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - சிங்கப்பூர் இடையே உற்பத்தி, தொழில்நுட்பம், உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புதுதில்லியில் நேற்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Luke Goh உடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டு வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பின்போது இருதரப்பு பாதுகாப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பரஸ்பரம் ஆலோசனை மேற்கொண்டதாக வெளியுறவு செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா - எகிப்து இடையே பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து அந்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Khaled Hashem Ali Maher உடன் நடத்திய பேச்சவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஜெய்ப்பூரில் நடைபெற்ற பிரிக்ஸ் வர்த்தக அமைச்சர்களின் கூட்டத்திற்கு இடையே இந்த சந்திப்பு நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – பிரேசில் இடையே வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு தொழில்துறை அமைச்சர் திரு. Marcio Fernando Elas Rosa உடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயம், எரிசக்தி, மருந்து உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளிடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டுகான வாய்ப்புகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன் அடிப்படையில் துறைமுகங்களின் செயல்பாடுகள் மதிப்பிடப்பட வேண்டும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய துறைமுக பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் கடல்சார் பாதுகாப்பு கட்டமைப்பில் தொழில்நுட்பத்துடன் கூடிய மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக அளவிலான வர்த்தகத்தில் துறைமுகங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ந்து வரும் இணைய வழி, புவிசார் அரசியல் சார்ந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன்கொண்ட உறுதியான ஒருங்கிணைந்த பாதுகாப்பு அமைப்புகள் அவசியம் என்று திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறை விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உடான் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு 45 நாட்களுக்கு ஒரு புதிய விமான நிலையம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில் கொண்டு உலகின் மிகச் சிறந்த விமானப் போக்குவரத்து சந்தையாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் நடவடிக்கைகளுக்காக அமெரிக்காவில் இருந்து பெருமளவிலான எத்தனாலை இறக்குமதி செய்ய இந்தியா முயற்சி மேற்கொண்டு வருவதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை மத்திய வர்த்தக அமைச்சகம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டம் உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகளில் எத்தனாலை இறக்குமதி செய்வது குறித்து ஆலோசனைகள் எதுவும் நடத்தப்படவில்லை என்று அந்த அமைச்சகம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

எத்தனால் இறக்குமதி தொடர்பான இந்தியாவின் கொள்கைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வெளியாகும் செய்திகள் தவறானவை என்று இந்திய வர்த்தக அமைச்சகத்தின் அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் அந்நாட்டைச் சேர்ந்த 30 ராணுவ வீர ர்கள் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்துள்ளனர்.

ஏமனில் உள்ள மரீப் மற்றும் Hadramout மாகாணங்களில் உள்ள சர்வதேச ராணுவ முகாம்களைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த் வீர ர்களின் குடும்பங்களக்கு அமெரிக்கா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிரியா தலைநகர் டமாஸ்கசில் நடந்த குண்டுவெடிப்பில் 2 பேர் உயிரிழ்ந்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர்.

டமாஸ்கசில் உள்ள Jaramana பகுதியில் கார் ஒன்றில் எடுத்து வரப்பட்ட வெடிபொருட்கள் வெடித்ததில் இந்த சம்பவம் நேரிட்டதாக அந்நாட்டு தொலைக்காட்சிகள் தெரிவிக்கின்றன.

சிரியாவில் நீண்டகாலமாக திரு. பஷல் அல்-ஆசாத் ஆட்சி செய்து வரும் நிலையில் பாதுகாப்புப் படையினர் மற்றும் குடிமக்களைக் குறிவைத்து பல்வேறு இடங்களில் இதுபோன்ற தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், கேரளம், ஒடிசா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், ஜார்கண்ட், மேற்குவங்கம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், உத்தராகண்ட் உள்ளிட்ட பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் நேற்றிரவு பெய்த கனமழை காரணமாக காம்பவுண்ட் சுவர் இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 2 பெண்கள் படுகாயமடைந்தனர்.

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள காவல்துறையினர் தீயணைப்புத் துறையினர் மற்றும் பேரிடர் மீட்புப் படையினர் விரைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே ஜம்மு-கஷ்மீரில் அண்மையில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து முதலமைச்சர் திரு. ஒமர் அப்துல்லா நேற்று ஆய்வு செய்தார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய அவர், மழை வெள்ளத்தால் பாதிக்கக் கூடிய பகுதிகளில் நீண்டகால அடிப்படையில் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தேசிய ஜூனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியில், ஒடிசா, மத்தியப்பிரதேசம் அணிகள் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

கோயம்புத்தூரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஒடிசா அணி 6-4 என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணையை வென்றது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில், மத்தியப்பிரதேசம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் ஜார்கண்ட் அணியை வென்றது.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 34 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

திண்டுக்கல்லில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 194 ரன் எடுத்தது.

195 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சேலம் அணி 19.4 ஓவரில் 160 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில், சேப்பாக் அணி - திருப்பூர் அணியையும், திண்டுக்கல் அணி - நெல்லை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

சிங்கப்பூருக்கு எதிரான 20 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

<<<<>>>>

ஆசிய படகு சாம்பியன் போட்டி இந்தியாவில் அக்டோபர் ஐந்தாம் தேதி தொடங்குகிறது.

அருணாச்சலப்பிரதேச மாநிலம் Siang மாவட்டத்தில் ஐந்து நாட்கள் நடைபெறும் இப்போட்டிக்கான ஆயத்த பணிகள் குறித்து, அம்மாநில முதலமைச்சர் திரு பேமா கண்டு, ஆய்வு செய்தார்.

இப்போட்டியில் பல்வேறு நாடுகளில் இருந்து வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>